வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 15.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பழங்குடியின சமூகத்தின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்க தனது அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பகவான் பிர்சா முண்டாவின் அர்ப்பணிப்பு மிக்க வாழ்க்கை இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக விளங்குகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தேசிய பத்திரிக்கையாளர் தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, முதலமைச்சர் திரு ரங்கசாமி, வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

நரேந்திர மோடி

பழங்குடியின சமூகத்தின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்க தனது அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். பீகார் மாநிலம் ஜமுயில் நடைபெற்ற பழங்குடியினர் தின விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர் மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வரும் **ஜன் மன் மற்றும் தர்திஆபா ஜன்ஜாதியா உத்கர்ஷ் கிராம் அபியான்** ஆகியவற்றின் மூலம் பழங்குடியினருக்கான நலத் திட்டங்கள் அவர்களுக்கு நேரடியாக சென்று சேர்வது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார். **ஜன்ஜாதியா உத்கர்ஷ்**

கிராம இயக்கத்தின் கீழ் பழங்குடியின மக்கள் வசிக்கும் கிராமங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான 80 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படுவதாகவும் அவர் கூறினார். பழங்குடியின சமுதாயத்திற்கு இத்தகைய தொடக்கத்தை உருவாக்குவதில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவின் சிறந்த பங்களிப்பிற்காக பிரதமர் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். பிரதமர் திரு நரேந்திர மோடி மேலும் பேசுகையில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் மாவட்டங்களில் **பகவான் பிர்சா முண்டாவின்** கவுரவ விழாக்கள் நடத்தப்படும் என்று கூறினார். நமது நாட்டின் பழங்குடியின மக்களின் பெருமை, பாரம்பரியம், கலாச்சாரம் போன்றவற்றை பாதுகாக்கும் வகையில் முந்தைய அரசுகள் நிதி வழங்கவில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார். நாட்டின் சுதந்திர போராட்டத்தில் **பகவான் பிர்சா முண்டா, சிடோ கன்ஹு** மற்றும் பிற பழங்குடியின வீரர்களின் பங்களிப்பை முந்தைய அரசுகள் இருட்டடிப்பு செய்து விட்டன என்றும் ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு உரிய முக்கியத் துவத்தை அளித்ததன் மூலம் பழங்குடியின வீரர்கள் குறித்த கண்ணோட்டம் மாறியது என்றும் தெரிவித்தார். சுகாதாரம், கல்வி, உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் பழங்குடியின சமுதாயத்தை தமது அரசு மேம்பாடு அடைய செய்துள்ளதாகவும் பிரதமர் கூறினார். பழங்குடியின சமுதாயத்தினரின் அறிவு மற்றும் பாரம்பரியத்தை பாராட்டிப் பேசிய அவர் அவற்றை பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார். பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளை தற்பொழுது மாற்றத்தை விரும்பும் பகுதிகளாக அரசு மேம்படுத்தி உள்ளது என்றார். பழங்குடியினரின் கல்வி, மருத்துவம் மற்றும் வேலை வாய்ப்பு போன்றவற்றில் தமது அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாகவும் **அரிவால் உயிரணு நோயை ஒழிக்க தீவிர நடவடிக்கை** மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். பழங்குடியின மக்களின் கல்வி வளர்ச்சிக்கு **700 ஏகலைவா பள்ளிகள் உட்பட** பழங்குடியினர் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறினார். பழங்குடியின சமூகங்களின் பாரம்பரிய மருத்துவத்தை அரசு பாதுகாத்து வருவதாகவும் தற்பொழுது

உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து அதை மேம்படுத்தும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இவ்விழாவின் போது 6 ஆயிரத்து 600 கோடி ரூபாய்க்கும் அதிகமான வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார். பகவான் பிர்சா முண்டாவின் 150-ஆவது பிறந்த நாள் விழாவை ஒட்டி அவரது நினைவாக நாணயம் மற்றும் தபால் தலையையும் பிரதமர் வெளியிட்டார். மேலும் பிரதமரின் ஜன் மன் திட்டத்தின் கீழ் பழங்குடியின மக்களுக்காக கட்டி முடிக்கப்பட்ட 11 ஆயிரம் வீடுகளின் கிரஹபிரவேச நிகழ்ச்சியிலும் பிரதமர் பங்கேற்றார்.

*அமித் ஷா*

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, தெரிவித்துள்ளார். புதுடெல்லி பன்சேரா பூங்காவில் இன்று பகவான் மிர்சா முண்டாவின் திருவுருவச் சிலையை திறந்து வைத்துப் பேசிய அவர் அன்னாரது அர்பணிப்பு மிக்க வாழ்க்கை இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக விளங்குகிறது என்றார். முன்னதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா உள்ளிட்டோர் இன்று காலை நாடாளுமன்ற வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள பகவான் பிர்சா முண்டாவின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*பிரதமர்-குருநானக்*

குருநானக் ஜெயந்திரை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் ஸ்ரீகுருநானக் தேவ் அவர்களின் போதனைகள், நம்மிடம் உள்ள இரக்கம், கருணை, மற்றும் பணிவு, போன்ற உணர்வுகளை மேம்படுத்திக் கொள்ள உந்துதல் அளிப்பதாகவும்

இதன் மூலம் சமூகத்திற்கு சேவை செய்யவும், நமது பூமியை சிறப்பாக மாற்றவும் நாம் ஊக்குவிக்கப்படுகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

*தர்மேந்திர பிரதான்*

மாணவர்களுக்கான நுழைவுத் தேர்வுகளை பிழையின்றி நடத்துவதற்கு அரசு உறுதிப் பூண்டுள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். இன்று ஐதராபாத்தில் நடைபெற்ற **இண்டியன் ஸ்கூல் ஆப் பிஸ்னஸ்** அமைப்பின் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் டாக்டர் **ராதாகிருஷ்ணா** கமிட்டியின் பரிந்துரையின் அடிப்படையில் நுழைவுத் தேர்வு முறையில் மாற்றங்கள் கொண்டு வருவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றார். தேர்வு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் மத்திய அரசுடன் மாநில அரசுகளும் இணைந்து செயல்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

*புதுச்சேரி-பழங்குடியினர் விழா*

பகவான் பிர்சா முண்டாவின் 150-ஆவது பிறந்த தினத்தை ஒட்டி, பழங்குடியினர் கவுரவ தின விழா இன்று புதுச்சேரியில் நடைபெற்றது. புதுச்சேரி அரசின் ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தர்மாபுரியில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி கலந்து கொண்டு பழங்குடியின மக்களுக்கும், மாணவர்களுக்கும் பரிசுத் தொகுப்புகள் வழங்கி சிறப்பித்தார். முன்னதாக பீகார் மாநிலம் ஜமூயில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்ற பழங்குடியின தின விழா நிகழ்ச்சிகள் காணொலி மூலம் நேரடியாக ஒளிபரப்பப் பட்டது. இந்நிகழ்ச்சியை முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு சாய் ஜே சரவணன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஏகேடி ஆறுமுகம், திரு கே எஸ்பி ரமேஷ், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவ்கான், அரசு செயலர்கள்

திரு நெடுஞ்செழியன், டாக்டர் முத்தம்மா, மற்றும் பழங்குடியின மக்கள், மாணவ மாணவிகள் உட்பட பலரும் பார்வையிட்டனர்.

இதற்கிடையே, பகவான் பிர்சா முண்டாவின் 150-ஆவது பிறந்த நாளை ஒட்டி, ஏனாமில் நேரு யுவகேந்திர சார்பில் பழங்குடியினர் தின விழா கொண்டாடப்பட்டது. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அரசு ஐடிஐ வளாகத்தில் நடைபெற்ற விழாவில் மாணவர்கள் மரக் கன்றுகளை நட்டனர். இவ்விழாவில் நேரு யுவகேந்திராவின் ஏனாம் அதிகாரி திரு கோபி அரசு ஐடிஐ முதல்வர் திரு சிந்தப்பள்ளி கிருஷ்ண சுதாகர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

*ரங்கசாமி வாழ்த்து*

தேசிய பத்திரிக்கையாளர் தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, முதலமைச்சர் திரு ரங்கசாமி, வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மக்களின் தேவைகளை அரசின் கவனத்திற்கும், அரசின் சேவைகளை மக்களிடமும் கொண்டு சேர்ப்பதன் மூலம் ஜனநாயக சமூகத்திற்கு முக்கிய பங்காற்றி வரும் பத்திரிக்கையாளர்களுக்கு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் தாம் மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டுள்ளார். நேரம், காலம் பாராது மழை, புயல் போன்ற பேரிடர் காலங்களிலும் தங்களின் பணியை செவ்வனே மேற்கொண்டு வரும் பத்திரிக்கையாளர்களின் நலனைக் காப்பதில் தனது அரசு எப்போதும் மிகுந்த அக்கறையுடன் உள்ளது என்றும், பத்திரிக்கையாளர்களுக்கு தமது அரசு என்றென்றும் துணை நிற்கும் என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஊடகத் துறையில் நாளுக்கு நாள் ஏற்பட்டு வரும் வளர்ச்சிக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொண்டு பத்திரிக்கையாளர்கள் தங்கள் பணியில் முன்னேற்றம் காண வேண்டும் என்றும் முதலமைச்சர் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் துணிவுடன் அறம் காக்கப் போராடும் பத்திரிக்கையாளர்களின் பங்களிப்பு அளப்பரியது என்று

தெரிவித்துள்ளார். ஜனநாயகத்தின் 4-ஆவது தூணாக விளங்கும் பத்திரிக்கையின் வாயிலாக குரல் அற்றவர்களின் குரலாய் உண்மையை உரக்கச் சொல்லி சமூக முன்னேற்றத்தில் பெரும் பங்காற்றி வரும் பத்திரிக்கையாளர்களுக்கு வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

*நமச்சிவாயம்*

புதுச்சேரியில் சட்டம் -ஒழுங்கு மற்றும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவது உள்ளிட்ட காவல் துறை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் உள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தலைமையில் இன்று நடைபெற்றது. சட்டப் பேரவை வளாகத்தில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புதுச்சேரி காவல்துறை தலைமை இயக்குநர் ஷாலினி சிங், ஐஜி டாக்டர் அஜித்குமார் சின்ஹா, அரசு செயலர் திரு கேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆங்கிலப் புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் பொது மக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்துவது. போக்குவரத்து நெரிசலை சமாளிக்கும் வயைில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சுற்றுலா பயணிகளுக்கான பாதுகாப்பு உள்ளிட்டவை குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

*இலங்கை தேர்தல் முடிவு*

இலங்கையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் குறித்த முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி இலங்கையில் ஆளும் தேசிய மக்கள் சக்தி கூட்டணி 3-ல் 2-பங்கு பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றுள்ளது. நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 225 இடங்களில் தேசிய மக்கள் சக்தி 159 இடங்களை வென்றுள்ளது. முக்கிய எதிர்கட்சியான சஜித் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி 40 இடங்களிலும், இலங்கை தமிழரசு கட்சி 8 இடங்களிலும் வென்றுள்ளன. முன்னாள் இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கேயுடன்

கூட்டணி அமைத்திருந்த புதிய ஜனநாயக முன்னணி 5 இடங்களை மட்டுமே கைப்பற்றி பின்னடைவை சந்தித்துள்ளது.

கிரிக்கெட்

இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான 4-ஆவது மற்றும் கடைசி 20-20 கிரிக்கெட் போட்டி ஜோகன்ஸ்பெர்க் நகரில் இன்று இரவு 8.30 மணிக்கு தொடங்க உள்ளது. தென்னாப்பிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும் இந்திய அணி ஏற்கனவே நடைபெற்ற 3 போட்டிகளில் இந்தியா 2 போட்டிகளில் வெற்றி பெற்று 2-க்கு ஒன்று என முன்னிலையில் உள்ளது.

வானிலை

மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடலோரப் பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக வரும் 17-ஆம் தேதி வரை தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருவாரூர், நாகப் பட்டிணம், மயிலாடுதுறை, புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஒரு சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, தீவிரம் அடைந்துள்ள வடகிழக்கு பருவமழை காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் பரவலாக மழை பெய்துள்ளது. தமிழகத்தில் அதிகபட்சமாக திருநெல்வேலி நாலுமுக்கு பகுதியில் 10 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது. கடலூர் வடகுத்து பகுதியில் 8 சென்டிமீட்டர் மழையும் புதுச்சேரியில் 5 சென்டிமீட்டர் மழையும் பெய்துள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பழங்குடியின சமூகத்தின் பாரம்பரியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாக்க தனது அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பகவான் பிர்சா முண்டாவின் அர்பணிப்பு மிக்க வாழ்க்கை இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக விளங்குகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தேசிய பத்திரிக்கையாளர் தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, முதலமைச்சர் திரு ரங்கசாமி, வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்தி கூட்டணி வெற்றி பெற்றுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/15.11.2024/Script

-----------------------------------